7 வது தமிழ் புத்தகம் - வினா - விடை அடிப்படையில் :-

1) தமிழ்த்தென்றல் என அழைக்கப்படுபவர் யார்? = திரு.வி.க

2) திரு.வி.க விற்கு தமிழ்த்தென்றல் என்ற பட்டம் எதற்காக அளிக்கப்பட்டது? = அவரின் தமிழ்நடையை போற்றி

3) தொழிலாளர் நலன், பெண்கள் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு அயராது உழைத்தவர் யார்? = திரு.வி.க

4) மேடைத்தமிழுக்கு புது இலக்கணம் வகுத்தவர் யார்? = திரு.வி.க

5) ‘பண்ணினை இயற்கை வைத்தே பண்பனே போற்றி’ - என தொடங்கும் நம் பாடப்பகுதி வரி திரு.வி.க வின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது? = பொதுமை வேட்டல்

6) திரு.வி.க வின் பொதுமை வேட்டல் என்ற நூலின் நூல் அமைப்பு யாது? = 44 தலைப்பு + 430 பாடல்கள் (தெய்வநிச்சயம் முதல் போற்றி முடிய)

7) பொதுமை வேட்டலின் முதல் மற்றும் கடைசி அதிகாரம் யாது? = முதல் அதிகாரம் - தெய்வநிச்சயம்; கடைசி அதிகாரம் - போற்றி

8) பொதுமை வேட்டல் என்பதன் பொருள் யாது? = நாடு, மதம், இனம், மொழி, நிறம் ஆகியவற்றை கடந்து உலகத்தை ஒரு குடும்பமாக கருதுவது

9) திரு.வி.க வின் பிறந்த ஊர் எது? = துள்ளம் - காஞ்சிபுரம் மாவட்டம்

10) துள்ளம் எனும் ஊர் தற்போது எவ்வாறு அழைக்கப்படுகிறது? = தண்டலம்

11) தற்போது தண்டலம் அமைந்துள்ள பகுதி எது? = சென்னையை அடுத்துள்ள போரூருக்கு மேற்கே

12) இறைவனின் இருக்கை எதுவென்று திரு.வி.க அவர்கள் கூறுகிறார்? = உண்மை

13) திரு.வி.க ஆற்றிய பணி யாது? = சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் தமிழாசிரியர்

14) திரு.வி.க அவர்கள் வாழ்ந்த காலம் யாது? = 26.08.1883 - 17.09.1953

15) திரு.வி.க வின் வேறு நூல்கள் யாது? = மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை, தமிழ்த்தென்றல், உரிமை வேட்கை, முருகன் அல்லது அழகு, பொதுமை வேட்டல், உள்ளொளி

16) ‘பொய்யாமை பொய்யாமை ஆற்றின்’ மற்றும் ‘எல்லா விளக்கும் விளக்கல்ல’ - என்ற குறள்களில் அமைந்துள்ள அணி யாது? =சொற்பொருள் பின்வருநிலையணி

17) ‘புறந்தூய்மை நீரானமையும்’ - என்ற குறளில் இடம்பெற்றுள்ள அணி வகை யாது? = எடுத்துக்காட்டு உவமையணி

18) வள்ளுவன் என்பதன் பொருள் யாது? = அரசருக்கு அந்தரங்க ஆலோசனை கூறும் ஓர் உயர்ந்த அலுவலர்

19) திருவள்ளுவர் செய்த தொழில் யாது? = நெசவுத் தொழில்

20) மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்குக் கூறிய அறவுரை நூல் எது? = திருக்குறள்.

21) ‘எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே’ - என்று கூறியவர் யார்? = வள்ளலார்

22) திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = செம்மொழி

23) தமிழை செம்மொழி எனக் கூறக் காரணம் யாது? = மொழிக்கு இலக்கண வரம்பும் + சொற்களுக்கு திருந்திய வடிவம் இருப்பதால் தான்

24) செம்மொழியின் வகைகள் யாது? = கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகிய மொழிகள்

25) செம்மொழிகளை பட்டியிலட்ட மொழியியல் அறிஞர் யார்? = ச.அகத்தியலிங்கம் - (நாகர்கோவில் அருகில் உள்ள கேசவன்புதூரில் பிறந்தார்)

26) தற்போது பேச்சுவழக்கில் இல்லாத செம்மொழிகள் யாது? = கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம்

27) ‘தமிழ்மொழி அழகான சித்திர வேலைப்பாடமைந்த வெள்ளித்தட்டு அதில் வைக்கப்பட்ட தங்க ஆப்பிள் திருக்குறள்’ - எனக் கூறியவர் யார்? = டாக்டர்.கிரௌல்

28) ‘தமிழ் என்னை ஈர்த்தது, குறளோ என்னை இழுத்தது’ - என்று கூறியவர் யார்? = டாக்டர்.கிரௌல்

29) ‘திருந்திய பண்பும், சீர்திருத்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழியின் புகழ் செம்மொழியாம்’ - என்று கூறியவர் யார்? = பரிதிமாற் கலைஞர்

30) உலகின் மிகப்பழமையான நிலப்பகுதி குமரிக்கண்டம் அங்கு தோன்றியது எனக் கூறும் வரி யாது? = ‘ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி’

31) ‘ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழவிளங்கி’ - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = தண்டியலங்காரம்

32) பெற்றோரைக் குறிக்கும் அம்மை அப்பன் என்ற சொற்கள் எந்த நாட்டு தமிழ்ச்சொற்கள் ஆகும்? = குமரி நாடு (அ) நாஞ்சில் நாட்டு சொற்கள்

33) 'தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்' - என்று கூறியவர் யார்? = டாக்டர்.கால்டுவெல்

34) 'எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே' - என்ற வரி இடம்பெற்ற நூல் யாது? = தொல்காப்பியம்

35) வாழ்வியலக்கான பொருளிலக்கணம் கூறும் ஒரே மொழி யாது? = தமிழ்மொழி

36) தமிழ்மொழியை தவிர மற்ற மொழிகள் எதற்கு இலக்கணம் வகுக்கிறது? = எழுத்துக்கும், சொல்லுக்கும் இலக்கணம் வகுக்கிறது

37) தமிழை செம்மொழி என நிலைநாட்டச் சான்றாக கூறும் செவ்வியல் இலக்கியங்கள் மொத்தம் யாது? = 41 செவ்வியல் இலக்கியங்கள்

38) செவ்வியல் இலக்கியங்கள் சிலவற்றை கூறுக? = தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை (பதினெண் மேல்கணக்கு), பதினெண் கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், இறையனார் அகப்பொருளுரை ஆகியவை

39) தமிழில் இடுகுறி பெயர்கள் குறைவு; உயிர்களுக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு; பொருள்களுக்கு இல்லை

40) மலை, குன்று, பாறை, கிரி ஆகியவற்றை குறிக்கும் ஊர்கள் = குறிஞ்சி நில ஊர்கள் - (எ.கா:- ஆனைமலை, சிறுமலை, நாகமலை, மணப்பாறை, வால்பாறை, கள்ளக்குறிச்சி, நீலகிரி, கிருஷ்ணகிரி)

41) மலையை விட உயரத்தில் குறைந்தது = குன்று; குன்றை விட உயரத்தில் குறைந்தது = கரடு (அ) பாறை

42) மரம் செறிந்த பகுதிகள் எந்த நிலத்தை குறிக்கின்றன? = முல்லை நிலம் - (எ.கா:- ஆர்க்காடு, ஆலங்காடு)

43) நிலவளம் + நீர்வளம் + பயிர்வளம் ஆகியவை செறிந்த பகுதி எந்த நிலத்தை குறிக்கின்றன? = மருத நிலம்

44) ஆறுகள் + ஏரிகள் + ஒரே மரங்கள் அதிகம் கொண்ட பகுதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = மருத நிலம் (எ.கா:- ஆத்தூர், பேராவூரணி, சிவலப்பேரி)

45) கடற்கரை சேர்ந்த பகுதிகள் எந்த நிலத்தை குறிக்கின்றன?= நெல்லை நிலம்

46) தென்னை சூழ்ந்த பகுதி = தெங்கூர்; புளியமரம் அடர்ந்த பகுதி = புளியங்குடி, புளியம்பட்டி

47) 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே' - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = புறநானூறு

48) மோசி எனும் ஊர் அமைந்துள்ள இடம் யாது? = தென்பாண்டி நாட்டில் உள்ள ஓர் ஊர்

49) சேரமான் பெருஞ்சேரல் இரும்பொறையால் கவரிவீசப் பெற்ற பெருமைக்குரியவர் யார்? = மோசிகீரனார்

50) புறம் என்பது எந்த இரு செய்தலை குறிக்கிறது? = அறம் மற்றும் மறம் செய்தலை குறிக்கிறது

51) அரசனை குறிக்கும் வேறு பெயர்கள் யாது? = கோ, மன்னன், வேந்தன், குரிசில்

52) மோசிகீரனாரின் பாடல்கள் இடம் பெற்ற வேறு நூல்கள் யாது? = அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை

53) தமிழ் மன்னர்களின் அற உணர்வு + வீரம் + கொடை + ஆட்சி சிறப்பு + கல்விப் பெருமை + புலவர் பெருமிதம் + மக்கள் நாகரிகம் + பண்பாடு ஆகியவற்றை எந்த நூல்களின் மூலம் நாம் அறியலாம்? = புறநானூறு

54) நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எத்தனை பாளையங்களாக பிரித்து ஆட்சி புரிந்தனர்? = 72 பாளையங்களாக

55) முதல் எழுத்துகள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 30 (உயிரெழுத்து - 12; மெய்யெழுத்து - 18; 12 + 18 = 30)

56) முதலெழுத்துகள் சார்ந்து வரும் எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = சார்பெழுத்துகள்

57) சார்பெழுத்துகள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 10 (உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்)

58) முதுமொழிக்காஞ்சியின் ஆசிரியர் யார்? = மதுரை கூடலூர் கிழார்

59) சிறந்த பத்து இடம்பெறும் நூல் யாது? = முதுமொழிக்காஞ்சி

60) முதுமொழிக்காஞ்சியின் வேறு பெயர் யாது? = அறவுரைக்கோவை

61) முதுமொழிக்காஞ்சியின் துறை யாது? = காஞ்சித்திணையின் துறை

62) முதுமொழிக்காஞ்சியில் உள்ள பாடல்கள் எதனால் இயற்றப்பட்டது? = குறள்வெண் செந்துரை எனும் யாப்பு அணியால்

63) முதுமொழிக்காஞ்சி நூலில் உள்ள மொத்த பாடல்கள் யாது? = 100 பாடல்கள் - (10 அதிகாரம் + ஒவ்வொரு பத்து தலைப்புகளின் கீழ் பத்து பாடல்கள் உள்ளது)

64) 'ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம்' - என்ற தொடக்க வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = முதுமொழிக்காஞ்சி

65) 'யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன்' - கூறியவர் யார்? = டாக்டர் உ.வே.சா

66) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிறந்த ஊர் யாது? = எண்ணெய்கிராமம் - திருச்சி மாவட்டம்

67) மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் வாழ்ந்த ஊர் யாது? = திரிசிரபுரம்

68) மீனாட்சி சுந்தரனாரின் குறிப்பிடத்தகுந்த மாணவர்கள் யார்? = குலாம்காதர் நாவலர், சவரிராயாலு, தியாகராசர், சாமிநாதர்

69) மீனாட்சி சுந்தரனார் உ.வே.சா விற்கு ஆசிரியராக இருந்த இடம் எது? = திருவாவடுதுறை

70) தலபுராணங்கள் பாடுவதில் வல்லவர் யார்? = மீனாட்சி சுந்தரனார்

71) மீனாட்சி சுந்தரனார் இயற்றிய நூல்களில் மிகச் சிறப்புற்ற நூல் யாது? = சேக்கியார் பிள்ளைத்தமிழ்

72) மீனாட்சி சுந்தரனாருக்கு எந்த வேட்கை தணியாததாக இருந்தது? = கல்வி கற்க வேண்டும் என்ற வேட்கை

73) கல்வியே வாழ்க்கை என்று இருந்தவர் யார்? = மீனாட்சி சுந்தரனார்

74) 'நோய்க்கு மருந்து இலக்கியம்' என்று கூறியவர் யார்? = மீனாட்சி சுந்தரம்

75) மீனாட்சி சுந்தரனாரின் பிறப்பு - இறப்பு ஆண்டு யாது? = 1815 - 1876

76) சுண்ணாம்புக்காரன் தெரு உள்ள ஊர் யாது? = கும்பகோணம்

77) தன் குடும்பம் தொடர்பாக கும்பகோணத்தில் யாருக்கு பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்தார்? = மீனாட்சி நண்பர் ஆறுமுகம்

78) 'நாளை என் தாய்மொழி சாகுமானால் இன்றே நான் இறந்து விடுவேன்' - என்று கூறியவர் யார்? = ரசூல் கம்சதேவ் - ரஷ்ய நாட்டு கவிஞர்

79) சொல்ல துடிக்குது மனசு என்ற நூலை எழுதியவர் யார்? = வி.கே.டி.பாலன்

80) கோவூர்கிழார் எழுதிய வேறு நூல்கள் யாது? = நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை - ஆகியவற்றில் 18 பாடல்கள் உள்ளன

81) கோவூர்கிழார் எந்த மன்னனின் அவைக்கள புலவராக இருந்தார்? = நலங்கிள்ளி என்ற மன்னன்

82) எந்த இரு மன்னர்களுக்கிடையே நெடுங்காலம் பகைமை இருந்ததாக கோவூர்கிழார் கூறுகிறார்? = நலங்கிள்ளி மற்றும் நெடுங்கிள்ளி

83) பனம் பூ - சேரன்; அத்திப் பூ - சோழன்; வேப்பம் பூ - பாண்டியன் ஆகிய மன்னர்களை குறிக்கும் பூக்கள் ஆகும்

84) கிள்ளிவளவன் எந்த தலைநகரை அடிப்படையாக கொண்டு சோழ நாட்டை ஆட்சி புரிந்தான்? = புகார் நகரம்

85) கிள்ளிவளவன் என்ற மன்னன் கடையேழு வள்ளல்களில் எந்த மன்னருடன் பகைமை கொண்டிருந்தான்? = மலையமான் திருமுடிக்காரி

86) கோவூர்கிழார் கிள்ளிவளவன் என்ற மன்னனிடம் வாதாடி எந்த மன்னனின் இரு பிள்ளைகளை காப்பாற்றினார்? = மலையமான் திருமுடிக்காரி

87) நெடுங்கிள்ளி என்ற மன்னன் எந்த கவிஞரை எதிரி நாட்டு ஒட்ரன் என தவறாக நினைத்து கைது செய்து சிறையில் அடைத்தான்? = இளந்தரையனார்

88) நலங்கிள்ளி மன்னன் முற்றுகையிட்ட இடம் யாது? = உறையூருக்கு அருகில் உள்ள ஆவூர்க்கோட்டை

89) திரிகடுகத்தின் ஆசிரியர் பெயர் யார்? = நல்லாதனார்

90) நல்லாதனாரின் சிறப்பு பெயர் யாது? = செருஅடுதோள் நல்லாதன்

91) முத்துக்கதைகள் எனும் கதைத் தொகுப்பின் ஆசிரியர் யார்? = நீலவன்

92) ‘உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்’ - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = திரிகடுகம்

93) இராமானுஜர் பிறந்த ஊர் யாது? = ஈரோடு (1887)

94) இராமானுஜர் கல்வி கற்ற ஊர் யாது? = கும்பகோணம்

95) இராமானுஜர் பேசும் திறன் அற்றவராக இருந்த காலம் யாது? = 3 ஆண்டு வரை

96) இராமானுஜர் திண்ணை பள்ளியில் சேர்ந்த இடம் யாது? = காஞ்சிபுரம்

97) 1880 - ஆண்டு 15 வயதில் கணிதத்தில் சிறந்து விளங்கியவர் யார்? = கார்

98) கார் என்பவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்? = இங்கிலாந்து - இலண்டன் நகர்

99) இராமானுஜர் கணிதத்தில் சிறந்து விளங்கிய ஆண்டு எது? = 1902 (15 வது வயதில்)

100) இராமானுஜர் ஆற்றிய பணி யாது? = கடற்கரை துறைமுக எழுத்தர் பணி

101) இராமானுஜருக்கு கடற்கரை துறைமுக எழுத்தர் பணி யாரால் கிடைக்கப்பெற்றது? = தன் தந்தையால்

102) இராமானுஜர் தான் கண்டறிந்த தேற்றம் + எடுகோள்கள் - ஆகியவை அடங்கிய வினா தொகுப்பினை எந்த பெயரில் கட்டுரையாக எழுதினார்? = பெர்னௌலிஸ் எண்கள்

103) பெர்னௌலிஸ் எண்கள் என்ற கட்டுரை வெளியான இதழ் எது? = இந்திய கணிதக் கழகப் பத்திரிக்கை

104) பெர்னௌலிஸ் எண்கள் என்ற கட்டுரையை வெளியிட இராமானுஜத்திற்கு உதவியவர் யார்? = பிரான்சிஸ் ஸ்பிரிங்

105) பிரான்சிஸ் ஸ்பிரிங் பணியாற்றிய பணி யாது? = சென்னை துறைமுகத் தலைமைப் பொறியாளர்

106) இராமானுஜம் தனது கண்டுபிடிப்புகள் ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி கடிதமாக யாருக்கு அனுப்பினார்? = கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹார்டி என்பவருக்கு

107) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் உள்ள இடம் எது? = இங்கிலாந்து - இலண்டன்

108) சென்னை பல்கலைக்கழகத்திற்கு சொற்பழிவாற்ற வந்த பேராசிரியர் யார்? = ஈ.எச்.நெவில்

109) இங்கிலாந்தில் உள்ள இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்துடன் இணைந்த கல்லூரி யாது? = திரினிட்டி கல்லூரி

110) ஈ.எச்.நெவில் பேராசிரியர் பணியாற்றிய கல்லூரி எது? = திரினிட்டி கல்லூரி

111) இராமானுஜர் இங்கிலாந்துக்கு பயணம் செய்த ஆண்டு யாது? = 17.03.1914

112) இராமானுஜர் திரினிட்டி கல்லூரியில் ஆராய்ச்சி மாணவராக சேர்ந்த ஆண்டு யாது? = 18.04.1914

113) திரினிட்டி கல்லூரியில் இராமானுஜர் ஆராய்ச்சி மாணவராக சேர்ந்த பிறகு அந்த கல்லூரி அவருக்கு வழங்கிய உதவித்தொகை யாது? = 60 பவுண்டு / வருடம்

114) கிங்ஸ் கல்லூரியின் கணித பேராசிரியர் யார்? = ஆர்தர்பெர்சி

115) இராமானுஜரின் எந்த நூல் கணித பேராசிரியர் ஹார்டியால் வெளியிடப்பட்டது? = ரோசர்ஸ் இராமானுஜர் கண்டுபிடிப்புகள்

116) இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் உறுப்பினராக இராமானுஜம் சேர்க்கப்பட்ட ஆண்டு யாது? = 1918

117) இராமானுஜர் FRS பட்டம் பெற்ற ஆண்டு யாது? = 1918 ஆண்டு

118) FRS பட்டத்தை இராமனுஜர் அவர்களுக்கு வழங்கிய கல்லூரி எது? = இங்கிலாந்து பல்கலைக்கழகம்

119) FRS பட்டத்தை பெற்றதால் திரினிட்டி கல்லூரி இராமானுஜருக்கு வழங்கிய உதவித்தொகை யாது? = 250 பவுண்டு / வருடம் - 6 வருடத்திற்கு

120) FRS பட்டத்தை பெற்றதால் சென்னை பல்கலைக்கழகம் அவருக்கு வழங்கிய உதவித்தொகை யாது? = 250 பவுண்டு / வருடம் - 5 வருடத்திற்கு

121) யார் பரிந்துரை பேரில் சென்னை பல்கலைக்கழகம் இராமானுஜருக்கு உதவித்தொகை வழங்கியது? = ஹார்டி

122) சென்னை பல்கலைக்கழகம் வழங்கிய உதவித்தொகையை இராமானுஜர் எங்கு வழங்குமாறு கடிதம் எழுதினார்? = 50 பவுண்டு அவர் பெற்றோர்கள் + 200 பவுண்டு ஏழை எளிய மாணவர்களுக்கு வழங்குமாறு கூறினார்

123) ஹார்டி வந்த கார் எண் என்ன? = 1729 - (இரு கணங்களின் கூட்டுத்தொகையாக வரும் எண்களில் சிறிய எண்)

124) இராமானுஜம் இந்தியாவிற்கு திரும்பி வந்த ஆண்டு யாது? = 1919 மார்ச் 17

125) மீண்டும் இராமானுஜர் சென்னை வந்த ஆண்டு எது? = 1919 ஏப்ரல்

126) இராமானுஜர் இறந்த ஆண்டு யாது? = 1920

127) இராமானுஜர் எத்தனை ஆண்டுகள் புற்றுநோயால் அவதிப்பட்டார்? = 3 வருடம் - (1918 ஆண்டு முதல் 1920 வரை)

128) ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்தபட்சம் ஒரு ஜாகோபி என்று கூறியவர் யார்? = லிட்டில்வுட்டு

129) ஆய்லர் என்பவர் எந்த ஆண்டின் சிறந்த கணிதமேதை ஆவார்? = 18 ஆம் நூற்றாண்டு

130) ஜாகோபி என்பவர் எந்த ஆண்டின் சிறந்த கணிதமேதை ஆவார்? = 19 ஆம் நூற்றாண்டு

131) ஆய்லர் என்ற கணிதமேதை எந்த நாட்டை சேர்ந்தவர் ஆவார்? = சுவிட்சர்லாந்து

132) ஜாகோபி என்ற கணிதமேதை எந்த நாட்டை சேர்ந்தவர் ஆவார்? = ஜெர்மனி

133) 'கணித திறமையால் விஞ்ஞான உலகினை பிரமிக்க செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தை பெற்ற பிறவிக் கணிதமேதை இராமானுஜர்' - கூறியவர் யார்? = இந்திராகாந்தி

134) 'இராமானுஜன் ஒரு முதல் தரமான கணித மேதை' - என்று கூறியவர் யார்? = இலண்டன் ஆளுநர் லார்ட்மெண்ட் லண்ட்

135) 'இராமானுஜர் 20 வது நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை' - என்று கூறியவர் யார்? = பேராசிரியர் சூலியன் கக்சுலி

136) நடுவணரசு இராமானுஜருக்கு அஞ்சல் தலை வெளியிட்ட ஆண்டு யாது? = 1962

137) இராமானுஜருக்கு எந்த மதிப்பிலான அஞ்சல்தலையை நடுவணரசு வெளியிட்டது? = 15 காசு அஞ்சல்தலை - மொத்தம் 25,00,000 அஞ்சல்தலைகளை வெளியிட்டது

138) எந்த பிறந்த நாளின் போது நடுவணரசு இராமானுஜருக்கு அஞ்சல்தலையை வெளியிட்டது? = 75 வது பிறந்த நாள்

139) பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு நிறுவப்பட்ட ஆண்டு யாது? = 1971

140) இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் நிறுவப்பட்ட ஆண்டு யாது? = 1972

141) இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு மற்றும் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் ஆகிய இரண்டும் நிறுவப்பட்டுள்ள இடம் யாது? = சென்னை

142) இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழு (1971) மற்றும் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனம் (1972) ஆகிய இரண்டும் நிறுவும் போது தமிழக முதலமைச்சராக இருந்தவர் யார்? = கலைஞர் மு.கருணாநிதி

143) இராமனுஜருக்கு மார்பளவு வெண்கல சிலையை இந்தியாவிற்கு கொண்டு வந்தவர்கள் யார்? = ரிச்சர்ட், ஆஸ்கே (விசுகன்சீன் பல்கலைக்கழகம்)

144) இராமானுஜரின் மார்பளவு வெண்கல சிலையை இந்தியாவிற்கு கொண்டு வந்த ஆண்டு யாது? = 1984

145) விசுகன்சீன் பல்கலைக்கழகம் அமைந்துள்ள நாடு யாது? = அமெரிக்கா

146) இராமானுஜரின் 3000 முதல் 4000 தேற்றங்களை ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்ட நிறுவனம் யாது? = டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம்

147) ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்ட ஆண்டு யாது? = 1957

148) காளமேகப்புலவரின் இயற்பெயர் யாது? = வரதன்

149) ஆசுகவி, மதுரகவி, வித்தாரக்கவி, சித்திரக்கவி பாடுவதில் வல்லவர் யார்? = காளமேகப்புலவர்

150) இருபொருள் அமைய நகைச்சுவையுடன் பாடுவதில் வல்லவர் யார்? = காளமேகப்புலவர்

151) திருவானைக்கா உலா என்ற அரிய இலக்கியத்தை எழுதியவர் யார்? = காளமேகப்புலவர்

152) காளமேகப்புலவர் எந்த கோவிலின் மடப்பள்ளியில் பணிபுரிந்தார்? = திருவரங்கக் கோவில் (திருச்சி)

153) வைணவ சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறியவர் யார்? = காளமேகப்புலவர்

154) யார் மீது கொண்ட அன்பால் காளமேகப்புலவர் வைணவ சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினார்? = மோகனாங்கி மீது கொண்ட அன்பால்

155) தனிப்பாடல் திரட்டு நூலைத் தொகுத்தவர் யார்? = சந்திரசேகர கவிராசப் பண்டிதர்

156) தனிப்பாடல் திரட்டு நூலைத் தொகுபித்தவர் யார்? = இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமி

157) எந்த நூல்களின் மூலம் தமிழ்மொழியின் பெருமையையும், புலவர்களின் புலமையையும், சொல்லின்பம், பொருளின்பம், கற்பனைஇன்பம் ஆகியவற்றை பெறலாம்? = தனிப்பாடல் திரட்டு நூல்களின் மூலம்

158) ‘எறும்புத்தன் கையால் எண் சாண்’ - என்று கூறியவர் யார்? = ஔவையார்

159) இரவீந்திரநாத் தாகூரின் இலக்கியநடை உயர்வுக்கு காரணம் எதுவென்று காந்தி கூறுகிறார்? = அவருடைய தாய்மொழி

160) மதன்மோகன் மாளவியாவின் ஆங்கிலப்பேச்சு எது போன்றது? = வெள்ளி போன்றது

161) மதன்மோகன் மாளவியாவின் தாய்மொழிப் பேச்சு எது போன்றது? = தங்கம் போன்றது

162) ஒரு மொழியின் தன்மை எதைப் பொருத்து அமையும்? = மக்களின் தன்மை பொருத்தே அமையும்

163) இரண்டாவது கல்வி மாநாடு நடைபெற்ற இடம் யாது? = புரோச்நகர் - குஜராத்

164) இரண்டாவது கல்வி மாநாடு நடைபெற்ற ஆண்டு யாது? = 1917

165) யாருடைய சாதனைகளை கண்டு மகிழ்ச்சி அடைவதாக காந்தி கூறுகிறார்? = ஜெகதீஸ் சந்திரபோஸ், பி.சி.ராய்

166) பயிற்றுமொழி குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதை போன்றது - என்று கூறியவர் யார்? = காந்தி

167) யார் பேசும் போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கின்றனர் என்று காந்தி கூறுகிறார்? = முன்சிராம் பேச்சு

168) முன்சிராம் பேசும் போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்க காரணம் எதுவென்று காந்தி கூறுகிறார்? = அவருடைய தாய்மொழி அறிவு

169) பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும் பள்ளியில் ஏற்படும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும் - என்று கூறியவர் யார்? = காந்தி

170) தாய்மொழியில் அறிவை பெறுவதே சிறந்தது - என்று கூறியவர் யார்? = காந்திஜி

171) ‘வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம்’ - என்பது எந்த மொழி பழமொழி ஆகும்? = ஆங்கில பழமொழி

172) திருவாரூர் நான்மணிமாலை என்ற நூலை எழுதியவர் யார்? = குமரகுருபரர்

173) நான்மணிமாலை என கூறப்படும் நான்கு வகையான மணிமாலைகள் எவையவை? = முத்து, பவளம், மரகதம், மாணிக்கம்

174) திருவாரூர் நான்மணிமாலை நூல் எத்தனை வகையான பாக்களால் பாடப்பட்டுள்ளன? அவை யாவை? = 4 வகை - 1) வெண்பா, 2) கட்டளைக்கலித்துறை, 3) ஆசிரிய விருத்தம், 4) ஆசிரியப்பா

175) குமரகுருபரர் பிறந்த ஊர் யாது? = திருவைக்குண்டம்

176) குமரகுருபரர் காலம் யாது? = 16 ஆம் நூற்றாண்டு

177) குமரகுருபரர் எழுதிய வேறு நூல்கள் யாது? = நீதிநெறி விளக்கம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், கந்தர் கலிவெண்பா, மதுரைக் கலம்பகம்

178) 'என்பணிந்த தென்கமலை' இவ்வடியில் தென்கமலை உணர்த்தும் பொருள் யாது? = தெற்கில் உள்ள திருவாரூர்

179) வாணிதாசனின் இயற்பெயர் யாது? = எத்திராசலு (எ) அரங்கசாமி

180) வாணிதாசனின் சிறப்பு பெயர்கள் யாது? = கவிஞரேறு, பாவலர் மணி, தமிழகத்தின் வோர்ட்ஸ் வொர்த்

181) பிரெஞ்ச் அரசின் செவாலியர் விருது பெற்ற கவிஞர் யார்? = வாணிதாசன்

182) வாணிதாசன் பிறந்த இடம் யாது? = புதுவையை அடுத்த வில்லியனூர்

183) எந்த இரு மொழிகளில் வாணிதாசனின் பாடல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன? = உருஷியம், ஆங்கிலம்

184) குழந்தை இலக்கியம் என்ற நூலை எழுதியவர் யாரா? = வாணிதாசன்

185) தென்னிந்தியாவின் ஏதென்ஸ் என அழைக்கப்படும் நகரம் எது? = மதுரை

186) பாண்டியநாட்டின் பழைமையான தலைநகரம் எது? = மதுரை

187) உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் வேளையிலும் விழித்திருக்கும் தூங்கா நகர் எது? = மதுரை

188) 'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரை' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = பரிபாடல்

189) 'தமிழ்கெழு கூடல்' - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = புறநானூறு

190) 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = சிறுபாணாற்றுப்படை - (ஆசிரியர் - நல்லூர் நத்தத்தனார்)

191) 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை, ஓங்குசீர் மதுரை, தென்தமிழ் நன்னாட்டு தீதுதீர் மதுரை' - ஆகிய வரிகள் இடம் பெற்றுள்ள நூல் யாது? = சிலப்பதிகாரம்

192) சேரநாடு - வேழமுடைத்து; சோழநாடு - சோறுடைத்து; பாண்டியநாடு - முத்துடைத்து; தொண்டைநாடு - சான்றோர் உடைத்து;

193) அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராக பணியாற்றியவர் யார்? = மாணிக்கவாசகர்

194) தாஜ்மகாலை ஒத்த திருமலை நாயக்கர் மகாலை அமைத்தவர் யார்? = திருமலை நாயக்கர்

195) திருமலை நாயக்கர் மகாலின் உயரம் மற்றும் சுற்றளவு யாது? = 82 அடி உயரம் + 19 அடி சுற்றளவும் கொண்டது

196) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் ஆசிரியர் யார்? = குமரகுருபரர்

197) மதுரையில் முதன் முதலில் எத்தனையாவது தமிழ்ச்சங்கம் நடைப்பெற்றது? = நான்காவது தமிழ்ச்சங்கம்

198) நான்காவது தமிழ்ச்சங்கத்தை மதுரையில் தோற்றுவித்தவர் யார்? = வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

199) மீனாட்சி அம்மன் கோவில் எந்த பகுதி கோபுரம் மிகவும் உயரமானது? = தெற்கு கோபுரம் - 160.9 அடி

200) தெற்கு கோபுரம் எத்தனை சுதை உருவங்களை கொண்டது? = 1511 சுதை உருவங்கள்

201) மீனாட்சி அம்மன் கோவிலில் எந்த பகுதி கோபுரம் மிகவும் பழைமையானது? = கிழக்கு கோபுரம்

202) அறுவை வீதி - ஆடைகள் விற்கும் வீதி; கூல வீதி - தானியக்கடை; மறையவர் வீதி - அந்தணர் வீதி;

203) மதுரை நகரை விழா மல்கு நகரமாக ஆக்கியவர் யார்? = திருமலை நாயக்கர்

204) திரைக்கவித்திலகம் என அழைக்கப்படுபவர் யார்? = அ.மருதகாசி

205) அ.மருதகாசி பிறந்த ஊர் யாது? = மேலக்குடிக்காடு - திருச்சி மாவட்டம்

206) உழவர்கள் எவற்றை தன் செல்வமாக கருதுகிறார்கள்? = நெற்கதிர்களை

207) ந.பிச்சமூர்த்தியின் இயற்பெயர் யாது? = ந.வேங்கட மகாலிங்கம்

208) ந.பிச்சமூர்த்தி பிறந்த ஊர் யாது? = கும்பகோணம் - தஞ்சாவூர் மாவட்டம்

209) நீ தந்த கனி இது, நீ தந்த கரும்பிது... - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = ந.பிச்சமூர்த்தி

210) பாரதிக்குப்பின் கவிதை மரபில் திருப்பம் விளைவித்தவர் யார்? = ந.பிச்சமூர்த்தி

211) ந.பிச்சமூர்த்தி கவிதைகள் என்னும் நூலில் மொத்தம் எத்தனை கவிதைகள் உள்ளன? = 83 கவிதைகள்

212) ந.பிச்சமூர்த்தி அவர்கள் வழக்கரைஞராக பணியாற்றிய ஆண்டுகள் யாது? = 1924 - 1938 வரை - (14 வருடம்)

213) ந.பிச்சமூர்த்தி அவர்கள் கோவில் நிர்வாக அலுவலராக பணியாற்றிய ஆண்டுகள் யாது? = 1938 - 1954 வரை - (16 ஆண்டுகள்)

214) உயிரின் முதலே என பிச்சமூர்த்தி எதனை போற்றுகிறார்? = கதிரவனை

215) பூக்களில் சிறந்த பூ பருத்திப்பூ - என்று கூறியவர் யார்? = திரு.வி.க

216) நெசவின் நான்கு வகைகள் யாது? = 1) தறி நெசவு, 2) விரல் நெசவு, 3) மேல்நோக்கு நெசவு, 4) கீழ்நோக்கு நெசவு

217) கலிங்கம் என்பது யாது? = பாவுநூல் + ஊடைநூல் இணைந்து உருவாகும் ஆடை ஆகும்

218) கைத்தறி நெசவு நடைபெறும் இடங்கள் யாது? = காஞ்சி, ஆரணி, மதுரை, கோவை, ஈரோடு, பரமக்குடி, சென்னிமலை, உறையூர், திருபுவனம்

219) துணி நெய்ய பயன்படும் கருவிகள் யாது? = அச்சுமரம், படைமரம், விழுதுகம்பு, குத்துக்கம்பி, ஓடம், ஊதுகுழல், பாவு

220) உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடி எது? = தமிழ்நாடு

221) ஆடையில் சிறப்பு பெற்ற இடங்கள் யாது? = காஞ்சி - பட்டாடைகள்; திருப்பூர் - பின்னலாடைகள்; மதுரை - சுங்குடிப் புடவைகள்; உறையூர் - கண்டாங்கி சேலைகள்; சென்னிமலை - போர்வைகள்

222) ஆயக்கலைகள் அறுபத்து நான்கனுள் தனியிடம் பெற்ற கலை எது? = நாடகம்

223) பழங்கால நாடக இலக்கண நூல்கள் சில = சயந்தம், முறுவல், செயிற்றியம், மதிவாணன்

224) கண்ணுக்கும் காதுக்கும் மனத்துக்கும் இன்பம் பயக்கும் கலை எதுவென்று கூறப்படுகிறது? = நாடகக்கலை

225) 20 வது நூற்றாண்டில் நாடக தமிழுக்கு புத்துணர்ச்சி ஊட்டியவர்கள் யார்? = பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்மந்தனார்

226) தமிழ் நாடக பேராசிரியர் என்று அழைக்கப்பட்டவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

227) மேலைநாட்டு நாடக ஆசிரியர்களான ஷேக்ஸ்பியர், எப்சன், மோலியர் போன்று தமிழிலும் நாடகம் உருவாக வேண்டும் என்று விரும்பியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

228) பரிதிமாற்கலைஞர் ஆற்றிய பணி யாது? = தமிழ் பேராசிரியர்

229) உயர்தனிச் செம்மொழித் தகுதி தமிழுக்கே உண்டு என அக்காலத்திலேயே முழங்கியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

230) பரிதிமாற்கலைஞரின் நாடக நூல்கள் யாது? = ரூபாவதி, கலாவதி, மானவிஜயம்

231) பரிதிமாற்கலைஞரின் தமிழ் ஆசிரியர் பெயர் யாது? = மதுரை சபாபதி முதலியார்

232) பரிதிமாற்கலைஞரின் இயற்பெயர் யாது? = சூரியநாராயண சாஸ்திரி

234) எந்த நூலின் போது சூரியநாராயண சாஸ்திரி என்ற தன் பெயரை பரிதிமாற்கலைஞர் என மாற்றிக்கொண்டார்? = தனிப்பாசுரத் தொகை

235) களவழி நாற்பது என்ற நூலை அடிப்படையாக கொண்டு பரிதிமாற்கலைஞர் எழுதிய நாடக நூல் யாது? = மானவிஜயம்

236) வடமொழி மேனாட்டு மரபுகளைத் தமிழ் நாடக மரபோடு இணைத்து பரிதிமாற்கலைஞர் எழுதிய நூல் யாது? = நாடகவியல்

237) 'மானப்பெருமையை மனக்கொண்டு அந்தோ' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = மானவிஜயம்

238) பரிதிமாற்கலைஞரை திராவிட சாஸ்திரி என்று அழைத்தவர் யார்? = இராவ் பகதூர் சி.வை.தாமோதரம் பிள்ளை

239) ரூபாவதி, கலாவதி ஆகிய இரு நாடகங்களிலும் பெண் வேடத்தில் நடித்தவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

240) நாடகத்தமிழ் உலகின் இமயமலை என்று அழைக்கப்படுபவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

241) நாடகங்கள் வாயிலாக பக்தி ஒழுக்கம் ஆகியவற்றை வலியுறுத்தியவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

242) சங்கரதாஸ் சுவாமிகள் நாடகங்களின் எண்ணிக்கை யாது? = 40 நாடகங்கள்

243) சங்கரதாஸ் சுவாமிகள் நாடங்கள் சில கூறுக? = பவளக்கொடி, வீர அபிமன்யு, சதிசுலோசனா, இலகுவசா, பக்தபிரகலாதா, சதிஅனுசுயா,கோவலன் சரித்திரம், வள்ளித் திருமணம்

244) 'பூவின் விவரம்பலகோடி...'- எனத் தொடங்கும் பாடலின் நாடகம் எது? = சதிசுலோசனா

245) 'துடிப்பிருக்கும் சங்கரதாசு எழுத்தில் எல்லாம் சுவை சொட்டும் சந்தநயம் தோய்ந்திருக்கும்' - என்று சங்கரதாஸ் சுவாமிக ளை புகழ்ந்தவர் யார்? = புத்தனேரி சுப்ரமணியம்

246) மா - அலைமகள்; பா - கலைமகள்; வி -மலைமகள் - என்று எந்த நூல் கூறுவதாக சங்கரதாஸ் சுவாமிகள் கூறுகிறார்? = திருவிளையாடற் புராணம்

247) எமன், இராவணன், இரணியம் போன்ற வேடங்கள் புனைந்தவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

248) சிறுவர்களைக் கொண்டு நாடகக் குழுக்களைத் தோற்றுவித்தவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

249) பம்மல் சம்பந்தனார் சுகுணவிலாச சபையை தொடங்கிய ஆண்டு யாது? = 1891

250) எத்தனையாவது வயதில் பம்மல் சம்மந்தனார் சுகுணவிலாச சபையை தொடங்கினார்? = 18 வது வயதில்

251) நீதித்துறையில் பணியாற்றிய நாடக கலைஞர் யார்? = பம்மல் சம்பந்தனார்

252) பம்மல் சம்பந்தனாரின் மொத்த நாடகங்கள் எத்தனை? = 94

253) பம்மல் சம்பந்தனாரின் நாடகங்கள் சில கூறுக? = மனோகரா, கர்ணன், யயாதி, சபாபதி, பொன்விலங்கு

254) ஷேக்ஸ்பியர் நாடகங்கள் தழுவிய தமிழ் நாடகங்கள் எவை? = வாணிபுரத்து வாணிகன், விரும்பிய விதமே, அமலாதித்தியன்

255) கேளிக்கை நாடகம் என்ற வகையினையும், நாடக நையாண்டியினையும் தமிழ் நாடக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவர் யார்? = பம்மல் சம்மந்தனார்

256) பம்மல் சம்பந்தனாரின் நகைச்சுவை கதாபாத்திரத்தின் பெயர் யாது? = சபாபதி

257) பம்மல் சம்மந்தனார் தன் சபாபதி பாத்திரத்தை பற்றி எழுதிய கட்டுரை எது? = இனிய பயணம்

258) குறள் வடிவத்தைத் தன் போக்கிற்கேற்ப மாற்றி எழுதும் தன்மை படைத்த நாடக கலைஞர் யார்? = பம்மல் சம்மந்தனார்

259) தமிழ்நாடகப் பேராசிரியர் என அழைக்கப்படுபவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

260) தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என அழைக்கப்படுபவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

261) தமிழ் நாடகத்தந்தை, கலைஞர் - என அழைக்கப்படுபவர் யார்? = பம்மல் சம்மந்தனார்

262) 'தொட்டனைத்து ஊறும் மணற்கேணி' - இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது? = எடுத்துக்காட்டு உவமையணி

263) பள்ளர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் சிற்றிலக்கிய நூல் எது? = பள்ளு

264) இரண்டு மனைவிகள் மணந்து திண்டாடும் பள்ளனின் வாழ்க்கை வளத்தை வடித்துரைப்பது போலப் பாடப்பட்ட நூல் யாது? = முக்கூடற்பள்ளு

265) மருத நிலவளம் பற்றி அறிய உதவும் நூல் யாது? = முக்கூடற்பள்ளு

266) திருநெல்வேலி மாவட்ட பேச்சு வழக்கு அமைந்த நூல் யாது? = முக்கூடற்பள்ளு

267) சந்தநயம் அமைந்த பாக்களைக் கொண்ட நூல் யாது? = முக்கூடற்பள்ளு

268) முக்கூடற்பள்ளு என்ற நூலை நாடக ஆக்கம் கொடுத்தவர் யார்? = என்னாயினப் புலவர்

269) முக்கூடற்பள்ளு நூலின் ஆசிரியர் பெயர் யாது? = ஆசிரியர் பெயர் தெரியாது

270) முக்கூடலில் கலக்கும் மூன்று ஆறுகள் எவையவை? = தண்பொருநை, சிற்றாறு, கோதண்டராம ஆறு

271) முக்கூடலின் வேறு பெயர் யாது? = ஆசூர் வடகரை நாடு

272) ஊமத்தம் பூவை விரும்பிச் சூடும் இறைவன் யார்? = சிவபெருமான்

273) மருதூரில் உள்ள மக்கள் செய்யும் தொழில் யாது? = உலோகத் தொழில்

274) முக்கூடலுக்குத் தென்பால் உள்ள பகுதி எவ்வாறு அழைக்கப்படுகிறது? = சீவலமங்கைத் தென்கரை நாடு

275) காளைகளின் பெயர்கள் + விதைகளின் பெயர்கள் + 120 மீன் வகைகள் + 150 நெல் வகைகள் - ஆகியவற்றை கூறும் நூல் யாது? = முக்கூடற்பள்ளு

276) ஒன்பது மணிகள் என்பது எவையவை என கூறுக? = முத்து, புட்பராகம், கோமேதகம், பவளம், இரத்தினம், மரகதம், வைரம், மாணிக்கம், வைடூரியம்

277) கலிப்பு வேலை என்பது யாது? = கருமார், கொல்லர், தட்டார் செய்யும் வேலை

278) இயற்கை வேளாண்மை கூறுகள் எத்தனை வகைப்படும்? = 6 வகை [ 1) உழுதல், 2) விதைத்தல், 3) தொழு உரமிடுதல், 4) நீர் பாய்ச்சுதல், 5) கலை எடுத்தல், 6) காத்தல்]

279) ஒரு பலம் எடையுள்ள மண்ணை எத்தனை பலம் எடை அளவிற்கு உலரும் வரை உழ வேண்டும்? = கால் பலம் எடை அளவிற்கு

280) ஒரு பலம் எடையுள்ள மண்ணை கால் பலம் எடை அளவிற்கு உலரும் வரை உழ வேண்டும் - என்று கூறியவர் யார்? = திருவள்ளுவர் - (திருக்குறளில்)

281) பயிர்களுக்கு இடையே இருக்க வேண்டிய தூரங்கள் யாவை? = நெல் - நண்டோட; கரும்பு - ஏரோட; வாழை - வண்டியோட; தென்னை - தேரோட

282) செயற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், இல்லாமல் செய்யும் வேளாண்மை எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = அங்கக வேளாண்மை (இயற்கை வேளாண்மை)

283) தமிழ்நாட்டில் வேளாண்மை பல்கலைக்கழகம் எங்குள்ளது? = கோவை

284) எந்த ஐந்து பொருள்களை பஞ்சகவ்வியம் என்று அழைக்கப்படுகின்றன? = கோமயம், சாணம், பால், தயிர், நெய்

285) தனிப்பாடல் திரட்டில் பாடிய புலவர்களின் எண்ணிக்கை யாது? = 110

286) தனிப்பாடல் திரட்டில் உள்ள மொத்த பாடல்கள் யாது? = 1113

287) அந்தகக்கவி வீரராகவரின் பிறந்த ஊர் யாது? = புதூர் - காஞ்சிபுரம் மாவட்டம்

288) சீட்டுக்கவி பாடுவதிலும், நகைச்சுவை ததும்ப பாடுவதிலும் வல்லவர் யார்? = அந்தகக்கவி வீரராகவர்

289) அந்தகக்கவி வீரராகவர் இயற்றிய வேறு நூல்கள் யாது? = சந்திரவாணன் கோவை, சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ், சேயூர்க்கலம்பகம், திருக்கழுக்குன்றப்புராணம்

290) யானையை குறிக்கும் வேறு பெயர்கள் யாது? = களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பா, கைம்மா

291) அந்தகக்கவி வீரராகவர் பாடிய வள்ளல் யார்? = இராமவள்ளல்

292) பிறவிலேயே கண் பார்வை இழந்த கவிஞர் யார்? = அந்தகக்கவி வீரராகவர்

293) மலையருவி என்ற நூலின் ஆசிரியர் யார்? = கி.வா.ஜகந்நாதன்

294) மலையருவி நூலில் எத்தனை தலைப்புகளில் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன? = 13 தலைப்புகளில்

295) கி.வா.ஜகந்நாதன் அவர்களின் வேறு நூல்கள் யாது? = காஞ்சியில் இன்பம், நாடோடி இலக்கியம், குழந்தை இன்பம், மச்சுவீடு

296) தேவதாசி மரபில் பிறந்து தேவதாசி மரபை ஒழிப்பதற்கு பாடுபட்டவர் யார்? = மூவலூர் இராமமிர்தம் அம்மையார்

297) பெற்ற தாயால் எத்தனை ரூபாய்க்கு இராமமிர்தம் அம்மையார் விற்கப்பட்டார்? = 10 ரூபாய்க்கு

298) இராமமிர்தம் அம்மையார் எந்த வயதில் தேவதாசி ஒருவருக்கு விற்கப்பட்டார்? = 5 வது அகவை

299) இராமமிர்தம் அம்மையார்க்கு இசையும் நாட்டியமும் கற்றுத்தந்தவர் யார்? = அவர் கணவர் சுயம்பு

300) இராமமிர்தம் அம்மையாரை 'தமிழகத்தின் அன்னிபெசண்ட்' என அழைத்தவர் யார்? = அறிஞர் அண்ணா

301) இராமமிர்தம் அம்மையாரின் முதல் போராட்டம் நடந்த ஆண்டு எது? = 1917

302) இராமமிர்தம் அம்மையாரின் முதல் போராட்டம் நடந்த இடம் யாது? = மயிலாடுதுறை

303) ஆங்கிலேயர்களின் தடை உத்தரவு காரணமாக தான் பேசாமல் தனது கருத்துக்களை 'கரும்பலகையில்' எழுதி வெளிப்படுத்திய விடுதலை போராட்ட வீரர் யார்? = இராமமிர்தம் அம்மையார்

304) மூவர்ண கொடியை ஆடையாக அணிந்தவர் யார்? = இராமமிர்தம் அம்மையார்

305) காந்தியத்தை ஏற்போர் குடிசையில் வாழ வேண்டும் என கூறியவர் யார்? = காந்தி

306) கதர் அணிந்தவர்கள் உள்ளேவரவும் என்ற பலகையை தன் குடிலில் அமைத்தவர் யார்? = இராமமிர்தம் அம்மையார்

307) இராமமிர்தம் அம்மையார் அவர்கள் மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்ட ஆண்டு யாது? = 1938

308) இராமமிர்தம் அம்மையார் 1938 ஆம் ஆண்டில் - 42 நாட்கள் + 577 மைல்கள் + 87 கூட்டங்களில் கலந்து கொண்டு மொழிப்போரில் திருச்சி முதல் சென்னை வரை நடைபயணம் மேற்கொண்டு பேசினார்

309) 1938 ஆம் ஆண்டில் நடைபெற்ற மொழிப்போரில் கலந்து கொண்டு திருச்சி முதல் சென்னை வரை நடைபயணம் மேற்கொண்ட ஒரே பெண்மணி யார்? = இராமமிர்தம் அம்மையார்

310) தமிழக அரசு ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தை துவக்கிய ஆண்டு யாது? = 1989 ஆண்டு

311) தமிழக அரசு ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தை யாருடைய பெயரால் துவக்கினர்? = இராமமிர்தம் அம்மையார்

312) திருச்செந்திற்கலம்பகம் என்ற நூலை எழுதியவர் யார்? = சுவாமிநாத தேசிகர்

313) சுவாமிநாத தேசிகரின் சிறப்பு பெயர் யாது? = ஈசான தேசிகர்

314) கலம்பகம் எத்தனை உறுப்புகளைக் கொண்டது? = 18 (கலம் - 12; பகம் - 6)

315) திருவாவடுதுறை ஞானதேசிகராகிய அம்பலவான தேசிகமூர்த்திக்கு தொண்டராக இருந்த புலவர் யார்? = சுவாமிநாத தேசிகர்

316) சுவாமிநாத தேசிகர் யாரிடம் கல்வி கற்றார்? = மயிலேறும் பெருமாள்

317) 'சிறை அயனுக்காயின்' என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = திருச்செந்திற்கலம்பகம்

318) தமிழில் முதல் விருத்தப்பா காப்பியம் எது? = சீவகசிந்தாமணி

319) மணநூல், முக்திநூல் என்று சிறப்பிக்கப்படும் நூல் யாது? = சீவகசிந்தாமணி

320) சீவகசிந்தாமணி என்ற நூலை எழுதியவர் யார்? = திருத்தக்கதேவர்

321) திருத்தக்கதேவரின் வேறு நூல் யாது? = நரிவிருத்தம்

322) நிலையாமை கோட்பாட்டை விளக்கும் ஒரே தமிழ் நூல் எது? = நரிவிருத்தம்

323) சீவகசிந்தாமணி காப்பிய தலைவனான சீவகன் ஆசிரியரால் எந்த பெயரில் பாராட்டப்படுகிறார்? = காமத்திலகன்

324) 'வீழ்ந்து, வெண்மழை தவழும் விண்ணுறு பெருவரை பெரும்பாம்பு' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல் யாது? = சீவகசிந்தாமணி

325) சீவகனின் ஆசிரியர் பெயர் யாது? = அச்சணந்தி

326) விளையாட்டின் அடிப்படை நோக்கம் யாது? = போட்டியிடுதல்

327) ஆமூர் மல்லனுக்கும், நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீரவிளையாட்டை கூறும் நூல் யாது? = புறநானூறு

328) ஏறுதழுவுதல் எந்த நிலத்தின் வீர விளையாட்டாகும்? = முல்லை நிலம்

329) மதுரையில் யானைப்போர் காண்பதற்காக கட்டிய திடலின் பெயர் யாது? = தமுக்கம் மண்டபம்

330) தமுக்க மண்டபத்தை கட்டிய மன்னன் பெயர் யாது? = திருமலை நாயக்கர்

331) கோழியூரின் பழைய தலைநகர் பெயர் யாது? = உறந்தையூர்

332) தமிழரின் தற்காப்பு கலையில் சிறந்து விளங்குவது எது? = சிலம்பாட்டம்

333) மகளிர் விளையாடும் விளையாட்டு எது? = ஓரையாடுதல்

334) 'தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்

தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு' - என்று கூறியவர் யார்? = பாரதிதாசன்

335) மேழி பிடிக்கும்கை வேல்வேந்தர் நோக்கும்கை - என தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = கம்பர்

336) கம்பர் பிறந்த ஊர் யாது? = தேரழுந்தூர் - மயிலாடுதுறை அருகில்

337) கம்பரை ஆதரித்த வள்ளல் யார்? = சடையப்ப வள்ளல்

338) கம்பரின் காலம் யாது? = 12 ஆம் நூற்றாண்டு

339) கம்பரின் வேறு நூல்கள் யாது? = சிலை எழுபது, ஏர் எழுபது, திருக்கை வழக்கம், சரசுவதி அந்தாதி, சடகோபரந்தாதி, கம்பராமாயணம்

340) எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டு வியக்க வைக்கும் விந்தை மொழி எது? = ஓவியம்

341) காண்பவரைக் கவர்ந்திழுக்கும் உள்ளங்களைத் தன்வயப்படுத்தும் உயர்ந்த கலை எது? = ஓவியக்கலை

342) தமிழகத்தில் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாது? = 25

343) சங்ககால ஓவியங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன? = கண்ணெழுத்து

344) எழுத்து என்பதற்கு ஓவியம் என்றும் பொருள் உண்டு எனக் கூறும் இரு நூல்கள் யாது? = பரிபாடல், குறுந்தொகை

345) நேர்கோடு, கோணக்கோடு, வளைகோடு என்பன யாது? = ஓவியம் வரைவதற்கான அடிப்படை கோடுகளாகும்

346) எழுத்துக்களை உருவங்களாக (அ) சித்திர எழுத்துகளாக கொண்ட நாடு எது?

= சீனா

347) நடுகல் வணக்கம் பற்றி கூறும் நூல் யாது? = தொல்காப்பியம்

348) ஓவியக்கலையின் பெயர்கள் சிலவற்றை கூறுக?

= ஓவு, ஓவம், ஓவியம், சித்திரம், படம், படாம், வட்டிகைச் செய்தி

349) ஓவியக்கலைஞரின் வேறு பெயர்கள் யாது?

= ஓவியர், ஓவியப் புலவன், சித்திரக்காரர், கண்ணுள் வினைஞன், வித்தக வினைஞன், கிளவிவல்லோன்

350) ‘எண்ணத்தை வண்ணம் துணைகொண்டு வரைபவரை’ எவ்வாறு அழைப்பர்?

= கண்ணுள் வினைஞன்

351) ஆண் ஓவியர் - சித்திராங்கதன்; பெண் ஓவியர் - சித்திரசேனா;

352) ‘ஓவியச்செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றுத்துறைப் போக பொற்கொடி மடந்தை மாதவி’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் யாது? = சிலப்பதிகாரம்

353) ‘ஓவத்தனைய இடனுடை வனப்பு’ என்ற வரி இடம்பெற்ற நூல் யாது?

= புறநானூறு

354) காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன? = எழினி

355) வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவது எவ்வாறு அழைக்கப்படுகிறது? = புனையா ஓவியம்

356) ஆடு முதலான 12 ராசிகள் + விண்மீங்களையும் வரைந்த செய்தி கூறும் நூல் யாது? = நெடுநல்வாடை

357) யார் காலத்தில் மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டப்பட்டன? = பல்லவர்கள்

358) சித்திரகாரப்புலி என்று அழைக்கப்பட்ட மன்னர் யார்? = முதலாம் மகேந்திரவர்மன்

359) முதலாம் மகேந்திரவர்மன் எழுதிய ஓவிய நூலின் பெயர் யாது? = தட்சிண சித்திரம்

360) சித்தன்னவாசல் அமைந்துள்ள மாவட்டம் எது? = புதுக்கோட்டை மாவட்டம்

361) சித்தன்னவாசல் எந்த பாண்டிய மன்னன் காலத்தில் கட்டப்பட்டது? = அவனிபசேகர ஸ்ரீவல்லபன்

362) சித்தன்னவாசலில் ஓவியம் வரைந்த ஆசிரியர் பெயர் யாது? = இளம்கௌதமன்

363) சித்தன்னவாசல் ஓவியக்கலையின் காலம் எந்த நூற்றாண்டை சேர்ந்தது? = கி.பி.9 ஆம் நூற்றாண்டு

364) தஞ்சையை ஆண்ட மராட்டியர்கள் எதைக் கொண்டு ஓவியம் வரைந்தனர்? = ஓலை, கண்ணாடி, தந்தங்கள்

365) பலவகைப்பட்ட பண்புகளைக்கொண்டு பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை விட்டு நீங்காது செய்யுளுக்கே உரிமை பெற்று வருவும் சொற்கள் யாது? = உரிச்சொற்கள்

366) இலக்கணவகைச்சொற்களின் வகைகள் யாது? = 4 (பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்)

367) தொன்மை மிக்க உலக மொழிகள் எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் யார்? = தேவநேயப் பாவணர்

368) கவியரசு கண்ணதாசன் பிறந்த ஊர் யாது? = சிறுகூடல்பட்டி (1927)

369) கண்ணதாசனின் இயற்பெயர் யாது? = முத்தையா

370) கண்ணதாசனின் புனைப்பெயர்கள் சிலவற்றை கூறுக? = காரைமுத்துப் புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியநாதன், கமகப்பிரியா

371) ஜெர்மன் நாட்டின் கொடுங்கோலராகக் கருதப்பட்டவர் யார்? = ஹிட்லர்

372) இந்தியாவை பற்றி தவறாக பேசியதற்காக ஹிட்லருக்கு எதிராகத் திறமையாக வாதாடி, எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்புக் கேட்கச் செய்தவர் யார்? = செண்பகராமன்

373) நகை வணிகர் எவற்றை சிறந்த செல்வம் என்று கூறுகின்றனர்? = தங்கம், வைரம்

374) புலவர்கள் எவற்றை சிறந்த செல்வம் என்று கூறுகின்றனர்? = கல்விச் செல்வம்

375) வேற்றுமை மற்றும் வேற்றுமை உருபுகள் எத்தனை வகைப்படும்? = 8 வகை

376) எந்த இரு வேற்றுமைக்கு வேற்றுமை உருபுகள் கிடையாது? = முதல் மற்றும் எட்டாம் வேற்றுமை

377) பெயர்ச்சொல்லினது பொருளைச் செயப்படு பொருளாக வேறுபடுத்துவது எவ்வாறு கூறப்படுகிறது? = இரண்டாம் வேற்றுமை ஆகும்

378) இரண்டாம் வேற்றுமை உருபு யாது? - ஐ

379) மூன்றாம் வேற்றுமை உருபுகள் யாது? = ஆல், ஆன், ஒடு, ஓடு

380) நான்காம் வேற்றுமை உருபுகள் யாது? = கு

381) ஐந்தாம் வேற்றுமை உருபுகள் யாது? = இல், இன்

382) ஆறாம் வேற்றுமை உருபு யாது? = அது

383) ஏழாம் வேற்றுமை உருபுகள் யாது? = கண், உள், மேல், கீழ்

384) விளி வேற்றுமை என அழைக்கப்படும் வேற்றுமை வகை யாது? = எட்டாம் வேற்றுமை

385) ஒரு பெயரைக் கொண்டு முடியும் முற்றுப் பெறாத வினைச்சொல் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = பெயரெச்சம்

386) நம் முன்னோர் எப்பொருளை எச்சொல்லால் குறித்து வழங்கினார்களோ அப்பொருளை அச்சொல்லால் குறிப்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?? = மரபு - எ.கா:- யானைக்கன்று

387) மரபுச் சொற்களைப் பயன்படுத்தாமல் வேறு சொற்களைப் பயன்படுத்துவதை எவ்வாறு அழைக்கப்படுகிறது? = மரபுப்பிழை - எ.கா:- யானைக்குட்டி

388) உயிர்களைப் பலியிட வேண்டாம் என்று மன்னர் பிம்பிசாரர்க்கு அறிவுரை கூறியவர் யார்? = கௌதம புத்தர்

## ஓரெழுத்தொருமொழி :-

ஒரே ஒரு எழுத்தானது ஒரு சொல்லாக வந்து பொருள் தருவது___எனப்படும்? = ஓரெழுத்தொருமொழி

ஓரெழுத்தொருமொழிகள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 42 வகைகள்

நெட்டெழுத்தாகிய ஓரெழுத்தொருமொழி எத்தனை எழுத்துக்களை கொண்டது? = 40 எழுத்துக்கள்

குறில் எழுத்தாலாகிய ஓரெழுத்தொருமொழி எத்தனை எழுத்துக்களை கொண்டது? = 2 எழுத்துக்கள்

நெட்டெழுத்துகளின் பிரிவுகள் யாது? = 9 பிரிவுகள் :-

1) உயிர் வருக்கம் - 6;
2) ம வருக்கம் - 6;
3) த வருக்கம் - 5;
4) ப வருக்கம் - 5;
5) ந வருக்கம் - 5;
6) க வருக்கம் - 4;
7) வ வருக்கம் - 4;
8) ச வருக்கம் - 4;
9) ய வருக்கம் - 1]

1) உயிர் வருக்கம் கொண்ட எழுத்துகள் - 6 :-

a) ஆ - பசு (ஆவு), ஆன்மா, இரக்கம், நினைவு;

b) ஈ - பறவை, தா, குகை, தேனீ;

c) ஊ - உணவு, இறைச்சி, ஊன், தசை;

d) ஏ - அம்பு, உயர்ச்சி மிகுதி;

e) ஐ - அழகு, உயர்வு, உரிமை, தலைவன், இறைவன், தந்தை;

f) ஓ - மகிழ்ச்சி;

2) ம வருக்கம் கொண்ட எழுத்துகள் - 6 :-

a) மா - அழகு, மேன்மை, பெரிய, உயர்ந்த, மரம்;

b) மீ - உயர்ச்சி, மேலே, உச்சி;

c) மூ - மூப்பு, மூன்று, முதுமை;

d) மே - அன்பு, மேம்பாடு;

e) மை - அஞ்சனம், எழுதுமை, இருள்;

f) மோ - மோதல், முகரதல்

3) த வருக்கம் கொண்ட எழுத்துகள் - 5 :-

a) தா - அழிவு, தாண்டுதல், கொடு, கேட்பது;

b) தீ - நெருப்பு, தீமை;

c) தூ - தூய்மை, பகை;

d) தே - கடவுள், அருள்;

e) தை - ஒரு திங்கள், பொருத்து;

4) ப வருக்கம் கொண்ட எழுத்துகள் - 5 :-

a) பா - பாட்டு, அழகு;

b) பூ - மலர், புவி;

c) பே - நுரை, மேகம்;

d) பை - கொள்கலம், இளமை;

e) போ - போதல்;

5) ந வருக்கம் கொண்ட எழுத்துகள் - 5 :-

a) நா - நாக்கு, அயலார்;

b) நீ - முன்னிலை நீ;

c) நே - அன்பு, அருள்;

d) நை - இகழ்ச்சிக்குறிப்பு;

e) நோ - நோய், துன்பம்;

6) க வருக்கம் கொண்ட எழுத்துகள் - 4 :-

a) கா - காத்தல், சோலை; b) கூ - நிலம்;

c) கை - கை, ஒழுக்கம்; d) கோ - மன்னன், பசு;

7) வ வருக்கம் கொண்ட எழுத்துகள் - 4 :-

a) வா - வருதல்; b) வீ - மலர், விரும்புதல்;

c) வை - வைத்தல், வைக்கோல்; d) வெள - கைப்பற்றுதல், ஒலிக்குறிப்பு

8) ச வருக்கம் கொண்ட எழுத்துகள் - 4 :-

a) சா - சாதல்; b) சீ - இகழ்ச்சிக்குறிப்பு, இலக்குறி;

c) சே - காளை எடு, சிவப்பு; d) சோ - மதில், நகர்

9) யா வருக்கம் கொண்ட எழுத்துகள் - 1 :- a) யா - யாவை, ஒருவகை மரம்;

குறில் எழுத்துக்கள் - 2 :- a) நொ - நோய், துன்பம்; b) து - உண், அசைத்தல்;

மரபு பெயர்கள் சில :-

தாவரங்களின் உறுப்பு பெயர்கள் சில :- ஈச்சவோலை, தென்னங்கீற்று, கமுகுக் கூந்தல், நெல்தாள், சோளத்தட்டு, மூங்கில் இலை, தாழை மடல், வேப்பந்தழை

விலங்கு மற்றும் பறவைகளின் இளமைப் பெயர்கள் சில :- ஆட்டுக்குட்டி, குதிரை குட்டி, நாய் குட்டி, பன்றி குட்டி, பூனை குட்டி, புலிப்பறழ், கீரிப்பிள்ளை, சிங்கக்குருளை, பசுங்கன்று, மான்கன்று, கோழிக்குஞ்சு, குருவிக்குஞ்சு

பறவை மற்றும் விலங்குகளின் வாழிடம் சில :- குதிரைக் கொட்டில், கோழிக்கூண்டு, கோழிப்பண்ணை, மாட்டுத்தொழுவம், யானைக்கூடம், வாத்துப்பண்ணை, ஆட்டுப்பட்டி

பறவைகளின் ஒலிகள் சில :- காகம் கரையும், கிளி கொஞ்சும், குருவி கீச்சிடும், கோழி கொக்கரிக்கும், வண்டு முரலும், புறா குனுகும், சேவல் கூவும், ஆந்தை அலறும், வானம்பாடி பாடும்

விலங்குகளின் ஒலிகள் :- சிங்கம் முழங்கும், பசு கதறும், புலி உறுமும், எருது எக்காளமிடும், ஆடு கத்தும், குரங்கு அலப்பும், நாய் குரைக்கும், குதிரை கனைக்கும், நரி ஊளையிடும்

அயற்சொல் கேற்ற தமிழ்சொற்கள் சில :-

1) அசல் - முதல்; 2) அனுபவம் - பட்டறிவு; 3) அபாயம் - பேரிடர்;

4) அபிஷேகம் - நன்னீராட்டு; 5) சிபாரிசு - பரிந்துரை; 6) சபை - அவை;

7) கர்வம் - செருக்கு; 8) நிபுணர் - வல்லுநர்; 9) அந்தஸ்து - தகுதி;

10) கண்திருஷ்டி - கண்ணேறுபட்டுவிட்டது

## மரபுச் சொற்கள் சில :-

| | உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| 1) | ஆடு | தகர் | மறி |
| 2) | குரங்கு | கடுவன் | மந்தி |
| 3) | நண்டு | அலவன் | பெடை |
| 4) | மயில் | போத்து | அளகு |
| 5) | மாடு | எருது | நாகு |
| | | விடை | ஆ |
| | | காளை | - |
| 6) | மான் | கலை | பிணை |
| 7) | கோழி | சேவல் | பெட்டை |

**பிணை என்பதன் பொருள் யாது?** = ஆசை, உடன்பாடு, ஒட்டகம், கவரிமா, கழுதை, குதிரை, நாய், பன்றி, புல்வாய், யானை இவற்றின் பெண் இனத்திற்கு பிணை என்று கூறுவர்

## சொற்பொருள் தருக :-

பண் - இசை
வண்மை - கொடைத்தன்மை

போற்றி - வாழத்துகிறேன்
இருக்கை - ஆசனம்
புரை - குற்றம்

பயக்கும் - தரும்
சுடும் - வருத்தும்
அன்ன - அவை போல்வன
எய்யாமை - வருந்தாமல்

அகம் - உள்ளம்

அமையும் - உண்டாகும்.

அறிகை - அறிதல் வேண்டும்

தானை - படை

கடனே - கடமை

ஆர்கலி - நிறைந்த ஓசையுடைய கடல்

காதல் - அன்பு, விருப்பம்

மேதை - அறிவு நுட்பம்

வண்மை - ஈகை, கொடை

பிணி - நோய்

மெய் - உடம்பு

பால்ப்பற்றி - ஒருபக்கச் சார்பு

சாயினும் - அழியினும்

தூஉயம் - தூய்மை உடையோர்

ஈயும் - அளிக்கும்

நெறி - வழி

மாந்தர் - மக்கள்

வனப்பு - அழகு

தூறு - புதர்

வித்து - விதை

சுழி - உடல்மீது உள்ள சுழி, நீர்ச்சுழி

துன்னலர் - பகைவர், அழகிய மலர்

பரிவாய் - அன்பாய்

சாடும் - தாக்கும், இழுக்கும்

ஆடுபரி - ஆடுகின்ற குதிரை

கைம்மண்ணளவு - ஒரு சாண் எனவும் பொருள் கொளவர்.

மெத்த - மிகுதியாக

பந்தயம் - போட்டி

புலவீர் - புலவர்களே

கலைமடந்தை - கலைமகள்

உண்பொழுது - உண்ணும்பொழுது

பெறினும் - பெற்றாலும்

பால்பற்றி - ஒருபக்கச் சார்பு (நடுநிலைமையில் இருந்து மாறுதல்)

தோல்வற்றி - தோல்சுருங்கி

சாயினும் - அழியினும்

சான்றாண்மை - அறிவு ஒழுக்கங்களில் நிலைத்து நிற்றல்

குன்றாமை - குறையாது இருத்தல்

தூஉயம் - தூய்மை உடையோர்

ஈயும் - அளிக்கும்

நில்லாமை - நிலையாமை

நெறி - வழி

தூய்மை - தூய தன்மை

மாந்தர் - மக்கள்

நிறை ஒழுக்கம் - மேலான ஒழுக்கம்

தேற்றாதான் - கடைப்பிடிக்காதவன்

வனப்பு - அழகு

தூறு - புதர்

வித்து - விதை

என்பணிந்த - எலும்பை மாலையாக அணிந்த

தென்கமலை - தெற்கில் உள்ள திருவாரூர்

பூங்கோவில் - திருவாரூர் கோவிலின் பெயர்

புண்ணியனார் - இறைவன்

பதுமை - உருவம்

மெய்பொருள் - நிலையான பொருள்

கணக்காயர் - ஆசிரியர்.

மாரி - மழை

சேமம் - நலம்

தேசம் - நாடு

முட்டு - குவியல்

நெத்தி - நெற்றி

திரு - செல்வம்

கனகம் - பொன்

கோ - அரசன்

நிவேதனம் - படையல்அமுது

புரவி - குதிரை

கடுகி - விரைந்து

மேழி - கலப்பை, ஏர்

வேந்தர் - மன்னர்

ஆழி - மோதிரம்

சூழ்வினை - உண்டாகும் வறுமைத் துன்பம்

காராளர் - மேகத்தை ஆளுகின்றவர்களாகிய உழவர்

கசடு - குற்றம்
நிற்க - கற்றவாறு நடக்க
எண் - எண்கள், கணக்கு
எழுத்து - இலக்கண இலக்கியங்கள் (வரிவடிம்)
உவப்ப - மகிழ
தலைக்கூடி - ஒன்றுசேர்ந்து
உடையார் - செல்வர்
இல்லார் - ஏழை
ஏக்கற்று - கவலைப்பட்டு
கடையர் - தாழ்ந்தவர்
தொட்டனைத்து - தோண்டும் அளவு
மாந்தர் - மக்கள்
சாந்துணையும் - சாகும்வரையிலும்
ஏமாப்பு - பாதுகாப்பு
காமுறுவர் - விரும்புவர்
விழுச்செல்வம் - சிறந்த செல்வம்
மாடு - செல்வம்
தத்தும் புனல் - தத்திச்செல்லும் நீர்
மதோன் மத்தர் - பெரும்பித்தனாகிய சிவபெருமான்.
களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, கைம்மா - யானை
களபம் - சந்தனம்
மாதங்கம் - பொன்
வேழம் - கரும்பு
பகடு - எருது
கம்பமா - கம்ப மாவு
விண் - வானம்
வரை - மலை
முழவு - மத்தளம்
மதுகரம் - தேன் உண்ணும் வண்டு
கதி - துணை
பேறு - செல்வம்
நனி - மிகுதி (மிக்க)
தரம் - தகுதி
புவி - உலகம்

**பிரித்து எழுதுக:**

- யாதெனின் - யாது + எனின்
- பொய்யாதொழுகின் - பொய்யாது + ஒழுகின்

- பூங்கோவில் - பூ + கோவில்
- புடைத்தென்னார் - புடைத்து + என்னார்
- என்றுருகுவார் - என்று + உருகுவார்

- என்பணிந்த - என்பு + அணிந்த
- நேரிங்கே - நேர் + இங்கே
- சேமமுற - சேமம் + உற
- தேசமெல்லாம் - தேசம் + எல்லாம்
- பருவப்பெண் - பருவம் + பெண்
- நெற்கதிர் - நெல் + கதிர்
- நிலவுமுண்டோ - நிலவும் + உண்டோ
- மண்ணுண்டோ - மண் + உண்டோ
- நின்னடி - நின் + அடி
- ஒளியுண்யோ - ஒளி + உண்டோ
- கசடற - கசடு + அடி
- மணற்கேணி - மணல் + கேணி
- எழுத்தென்ப - எழுத்து + என்ப
- கற்றறிந்தார் - கற்று + அறிந்தார்
- மாடல்ல - மாடு + அல்ல

**பெயருக்கேற்ற சரியான வினைகள் சிலவற்றை கூறுக :-**

1) அடுப்பு மூட்டு; 2) சந்தனம் பூசு;
3) கோலம் இடு; 4) மாவை இடி;
5) பாயாசம் குடி; 6) பாலைப் பருகு;
7) மருந்து புகட்டு; 8) குடம் வனை;
9) காய்கறி அரி; 10) மலர் காய்;
11) இலை பறி; 12) விரலை சொடுக்கு;
13) இட்லி அவி; 14) உணவை பரிமாறு;
15) உமியைக் கருக்கு; 16) நீர் பாய்ச்சு